





admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்









| Vol: 03 | Issue: 18 | 4 Pages | 18.8.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 1 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 18 | 4 பக்கங்கள் | 18.8.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
**ஆண்டும் அஃதொப்ப தில்**

**விளக்கம்:**
**அவா அற்ற நிலைமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை, வேறு எங்கும் அதற்கு நிகரான ஒன்று இல்லை.**

## ஜம்மு காஷ்மீர் வெள்ளம், நிலச்சரிவு: 3வது நாளாக தொடரும் மீட்புப்பணிகள்



ஸ்ரீநகர், ஆக. 18

ஜம்மு காஷ்மீரின், கிஷ்துவார் மாவட்டத்தில்உள்ளசோசிட்டிகிராமத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மேக வெடிப்பால் திடீர் என கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் அங்குள்ள ஆற்றில் திடீர் என வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அந்த கிராமத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள மச்சைல் மாதா மலைக்கோவிலுக்கு செல்ல அங்கு குவிந்திருந்த ஏராளமான பக்தர்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டனர். மலைப்பாதையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், ஒரு சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. யாத்திரைக்கு சென்ற பக்தர்கள் உள்ளிட்ட பலர் இதில் சிக்கி கொண்டனர். மலைப்பாதையில் இருந்த வீடுகள், கட்டிடங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.

வாரி சுருட்டிசென்ற வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி, 60 பேர் உயிரிழந்தனர். மேலும், படுகாயம் அடைந்த 100க்கும் மேற்பட்டோருக்கு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 170 பேர் மீட்கப்பட்டு உள்ளனர். இதற்கிடையில், 75 பேர் காணாமல்போனதாகஅவர்களதுகுடும்பத்தினர்தெரிவித்துள்ளனர்,அவர்களில் சிலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பெரிய பாறைகள், மரக்கட்டைகள் மற்றும் இடிபாடுகளுக்கு அடியில் புதைந்திருக்கலாம் என்று உள்ளூர்வாசிகள் மற்றும் நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

மீட்பு நடவடிக்கையில், 3வது நாளாக தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர், துணை ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகத்தால் கிட்டத்தட்ட 10க்கும் மேற்பட்ட ஜேசிபி இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு, மீட்புப்பணிகள் நடந்து வருகிறது. மோப்பநாய் உதவியுடன் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஹமாஸ் அமைப்பு ஆயுத கிடங்காக பயன்படுத்திய மருத்துவமனையை தாக்கிய இஸ்ரேல்



டெல் அவிவ், ஆக. 18

காசாவில் ஒன்றரை ஆண்டுகளாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில், 61,900க்கும்மேற்பட்டபாலஸ்தீனியர்கள்உயிரிழந்துஉள்ளனர்.1லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்நிலையில், மத்திய காசாவின் ஜெய்துன் பகுதியில் அமைந்த அல்மாமதனி மருத்துவமனைக்கு வெளியே ஹமாஸ் அமைப்பின் பிரிவு ஒன்று செயல்பட்டு வந்துள்ளது. இதனை இரவில் நடத்திய வான்வழி தாக்குதலில் இஸ்ரேல் பாதுகாப்பு படை அழித்துள்ளது. இதுபற்றி இஸ்ரேல் பாதுகாப்புபடைவெளியிட்டஎக்ஸ்சமூகஊடகபதிவில்,இந்தமருத்துவமனை வளாகத்தில் பயங்கரவாதிகள் ஆயுதங்களை பதுக்கி வைத்து வந்துள்ளனர். இதனை புகலிடம் போல் அவர்கள் பயன்படுத்தி வந்தனர். பொதுமக்கள் மற்றும்மருத்துவமனையைஅவர்கள்எப்படிதவறாகபயன்படுத்திவருகின்றனர். மக்களிடம் சுரண்டலில் ஈடுபடுகின்றனர் என்பதற்கான எடுத்துக்காட்டாக இது உள்ளது என தெரிவித்து இருக்கிறது.

## குழந்தை பராமரிப்பாளர் போர்வையில்... சிறுமிகளை காதலனுக்கு பாலியல் விருந்தாக்கிய இளம்பெண்

கலிபோர்னியா, ஆக. 18ற்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சான் டீகோ நகரில் வசித்து வருபவர் பிரிட்னி மே லையான் (வயது 31). ஆன்லைனில் தன்னை, குழந்தைகளை பராமரிக்கும் நபராக காட்டி கொண்டார். இதனை நம்பி, வேலைக்கு செல்லும் பெற்றோர் மற்றும் வேறு சிலர் தங்களுடைய குழந்தைகளை இவரிடம் விட்டு, விட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், 7 வயது சிறுமி லையானுடன் செல்லமாட்டேன் என அதன் தாயாரிடம் அழுதுள்ளது. இதனால், சந்தேகமடைந்த அந்த பெற்றோர் சிறுமியை மெல்ல விசாரித்ததில் அதிர்ச்சி தகவல் வெளியானது.

லையான், அவருடைய காதலரான சாமுவேல் கேப்ரீரா (வயது 31) என்பவரிடம் சிறுமியை அனுப்பி வைத்துள்ளார். சாமுவேல் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனை வீடியோவாகவும் பதிவு செய்துள்ளார். சாமுவேலின் கணினியில் பலாத்காரத்துடன் தொடர்புடைய நூற்றுக்கணக்கான வீடியோக்கள் இருந்துள்ளன. இதனை போலீசார் கைப்பற்றி உள்ளனர். இதில், சில குழந்தைகள் ஆட்டிசம் பாதித்தவர்கள் ஆவர். அவர்கள் சிறப்பு கவனத்துக்கு உரியவர்கள். ஆனால், அவர்களை காதலருக்கு பாலியல் விருந்தாக்கிய லையான், கடந்த காலங்களிலும் வேறு சில குற்ற சம்பவங்களில் ஈடுபட்டது போலீசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

லையான் மற்றும் சாமுவேல் இருவரும் பள்ளியில் படிக்கும்போது அறிமுகம் ஆனவர்கள். இதன்பின்னர், உடைமாற்றும் அறையில், பெண்களுக்கு தெரியாமல் அவர்களை ரகசிய வீடியோ எடுக்க சாமுவேல், லையானை பயன்படுத்தி இருக்கிறார். இதற்காக சாமுவேலுக்கு, 2021ம் ஆண்டு பரோல் இல்லாத சிறை தண்டனை அளிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், 3 முதல் 7 வயது வரையிலான பல சிறுமிகளை சாமுவேல் பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் தெரிய வந்துள்ளது. மாற்றுத்திறனாளியான குழந்தைகளை, காதலன் பாலியல் பலாத்காரம் செய்ய உதவிய வழக்கில் லையானுக்கு 100 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. எனினும், அந்நாட்டு சட்டத்தின்படி 20 ஆண்டுகள் சிறையில் இருந்த பின்னர், பொதுவாக குற்றவாளியை விடுவிக்கும் நிகழ்வே அதிகம் காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

# திராவிட மாடல் அரசுதான் இந்தியாவுக்கான திசைகாட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஆக. 18

தருமபுரியில் நடந்த அரசு விழாவில்தலைமையேற்றமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், ரூ.512.52 கோடி மதிப்பிலான 1044 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் பேசியதாவது;

இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாக நானோ, நீங்களோ மட்டும் கூறவில்லை. மத்திய அரசின் புள்ளிவிபரங்களே கூறுகின்றன. இதை பொறுத்துக்கொள்ள முடியாமல் மேடைகளில் கவர்னர் புலம்பி வருகிறார். எதிர்க்கட்சிகள் பேசுவதை பற்றி நான் கவலைப்படவில்லை. அது அவர்களின் அரசியல். எதிர்க்கட்சியை விட மலிவான அரசியலை கவர்னர் செய்கிறார். கவர்னர் மூலம் தனது இழிவான அரசியலை மத்திய பாஜக செய்து வருகிறது. கவர்னர் திமுக அரசுக்கு எதிராக அவதூறு பரப்பி திராவிடத்தை பழிப்பார். சட்டத்துக்கு ஒப்புதல் தரமாட்டார். இல்லாத திருக்குறளை எழுதி கொடுப்பார்.



தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என கவர்னர் குற்றம் சாட்டுகிறார். தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறும் கவர்னர், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளைப் பார்த்து, பாஜக ஆளும் மாநிலங்களில் போய்தான் கம்பு சுற்ற வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்களில் பாஜக ஆளும் உத்தரபிரதேசம்தான் முதலிடம் வகிக்கிறது. திமுக ஆட்சிக்கு எதிரான சில விஷமிகள் அவதூறுகளை அள்ளி வீசி வருகின்றனர்.

மகளிர் விடியல் பேருந்து பயண திட்டம் பல மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. திராவிட மாடல் அரசுதான் இந்தியாவுக்கான திசைகாட்டி. அடுத்து வரும் ஆட்சியும் உங்களுடைய ஸ்டாலின் ஆட்சிதான். இந்த ஆட்சி உங்களுக்கான ஆட்சி, மக்களுக்கான ஆட்சி, ஏழை, எளியோருக்கான ஆட்சி."

இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழ்நாட்டில் நாளை முதல் 38 ரெயில்களுக்கு கூடுதல் நிறுத்தங்கள்: எல்.முருகன்

சென்னை, ஆக. 18

சென்னையில் மத்திய மந்திரி எல். முருகன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

விரைவு ரெயில்கள், அதிவிரைவு ரெயில்கள் மற்றும் பயணிகள் ரெயில்கள் கூடுதல் நிலையங்களில் நின்று செல்ல வேண்டும் என்ற கோரிக்கை மனுக்கள் மக்களிடமிருந்து தமக்கு வந்ததாகவும், அதை தாம் மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவின் கவனத்துக்கு கொண்டு சென்றதை தொடர்ந்து, அவரது உத்தரவின் பேரில் 38 ரெயில்கள் கூடுதல் ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

இந்த அறிவிப்பின்படி சென்னை சென்ட்ரல் சிவமோகா வாராந்திர அதிவிரைவு ரெயில் (12691) ஆம்பூரில் நின்று செல்லும். சிவமோகாவிலிருந்து சென்னை சென்ட்ரல் வரை (12692) மறு மார்க்கத்திலும் இந்த ரெயில் ஆம்பூரில் நின்று செல்லும். அதேபோலதன்பாத் ஆலப்புழா விரைவு ரெயில் (13351) குடியாத்தம், வாணியம்பாடியில் தலா2நிமிடங்கள்நிற்கும். கோவையிலிருந்து நாகர்கோவில் செல்லும் விரைவு ரெயில் (16322) இருகூர் மற்றும் சிங்காநல்லூரில் நின்று செல்லும். இந்த ரெயில் மறு மார்க்கத்திலும் (16321) மேற்கூறிய ரெயில் நிலையங்களிலும், கூடுதலாக மேலப்பாளையத்திலும் நின்று செல்லும்.

புதுச்சேரிகன்னியாகுமரிவிரைவு ரெயில் (16861), பயணிகளின் வசதிக்காக வள்ளியூரில் நின்று செல்லும். தேசிய நெடுஞ்சாலை, விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களின் நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் உள்ளிட்ட சமூக நலத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

202526ல் மாநிலத்தின் ரெயில்வே திட்டங்களுக்காக மத்திய அரசு ரூ.6,626 கோடி வழங்கப்பட்டுள்



ளது. கடந்த 20092014 ஆண்டுகளுக்கு இடையே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் இந்த ஒதுக்கீடு ரூ.879 கோடியாக இருந்தது. ரெயில்வே திட்டங்களுக்காக கடந்த ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டதை விட தற்போது தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் தொகை 654 சதவீதம் அதிகமாகும்.

அமிர்த பாரத ரெயில் நிலையங்கள் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 2948 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 77 ரயில் நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தை மேம்படுத்த 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேபோல மதுரை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி, காட்பாடி மற்றும் சேலம் ரெயில் நிலையங்களை புனரமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

2,587 கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய தண்டவாளங்களைஅமைக்கும் பணிகள் 33,467 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 10 புதிய ரெயில் பாதைகள், 3 அகல ரெயில் பாதைகள் 9 இரட்டை வழி பாதைகள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை துறைமுகம் மதுரவாயல் பறக்கும் மேம்பாலச்சாலை திட்டப்பணிகளும் விறுவிறு என்று நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## குத்தாலம் உக்தவேதீஸ்வரர் ஆலயத்தில்,ஆடிக்கிருத்திகையை முன்னிட்டு ஸ்ரீ சண்முகநாத சுவாமி தெப்ப உற்சவம்: தருமை ஆதீன குரு மகா சன்னிதானம் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலத்தில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான உக்தவேதீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது இந்த ஆலயத்தில் வள்ளி தேவசேனா சமேதராக ஸ்ரீ சண்முகநாத சுவாமி தனி சன்னதியில் எழுந்தருளியுள்ளார். ஆடி கிருத்திகையை முன்னிட்டு முருகப்பெருமானுக்கு தெப்ப உற்சவம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு ஸ்ரீ சண்முகநாத சுவாமி ஸ்ரீ வள்ளி தேவசேனா உடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்திற்கு எழுந்தருளினார். மங்கள வாத்தியங்கள் முழங்க தெப்பம் ஆலய திருக்குளத்தில் ஐந்து முறை வலம் வந்தது. முருகப்பெருமானுக்கு மகா தீபாராதனை செய்யப்பட்டது. சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு முருகப்பெருமான் காட்சியளித்தார். தருமபுரம் ஆதீன 27 வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

## திருப்பூரில் தவ்ஹீத் ஜமாஅத் மங்கலம் கிளை சார்பாக இரத்த தானம் முகாம்




திருப்பூர் மாவட்ட TNTJ சார்பாக மங்கலம பகுதியில் 79 வது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மங்கலம் கிளை மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை இணைந்து இரத்த தான முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாவட்ட தலைவர்சிக்கந்தர்மற்றும்மாவட்ட செயலாளர் அன்சர் MISC பொருளாளர் அப்துல் ரஜாக் மாவட்ட துணை தலைவர் யாசர் அராபத் துணைசெயலாளர் பல்லடம் மீரான் ஆகியோர் தலைமை தாங்கினர். கிளை தலைவர் நஜீர் செயலாளர் ஜான்பாஷா பொருளாளர் அன்வர் மற்றும் பிலால் தவ்பீக் முஸ்தபா பாயஸ் ராசித் யாசர் முன்னிலை வகித்தனர். இம்முகாமில் 60 க்கு மேற்பட்டோர் பங்கேற்று 41நபர்கள்இரத்ததானம்செய்தனர். இரத்த தானம் அளித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.




பழநியில் ஆதித்தமிழர் சமூக நீதிப் பேரவை சார்பில் தலைமை ஒருங்கிணைப்பாளர் தலித். சுப்பிரமணியன் தலைமையில் தூய்மை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியில் பாஜக அமமுக திமுக உள்ளிட்ட மாற்றுக் கட்சியை சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் ஒட்டன்சத்திரம் ஒன்றிய கழகச் செயலாளர் என்.பி.நடராஜன் ஏற்பாட்டில் பாஜக பிரமுகர் ரகுபதி தலைமையில் கழகப் பொருளாளர் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி. சீனிவாசன் முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர் 2026ல் தமிழக முதல்வராக எடப்பாடி.கே.பழனிச்சாமி அவர்களை முதல்வராக்குவதே லட்சியம் என சூளுரைத்தனர்.



# கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி இல்லை

கோவை, ஆக. 18

கோவை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் போளுவாம்பட்டி வனச்சரகத்திற்குட்பட்ட பகுதியில் கோவை குற்றாலம் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. கோவையின் பிரதான சுற்றுலாத்தலமான இந்த நீர்வீழ்ச்சிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்த நீர்வீழ்ச்சியில் வாரந்தோறும் திங்கட்கிழமை தவிர்த்து மற்ற 6 நாட்களும் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்துவரும் கனமழையால் கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு கருதி



இன்று சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி, அருவியில் நீர்வரத்து சீராகும் வரை கோவை குற்றாலம்அருவி மூடப்படும் என்றும், மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் கோவை குற்றாலத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் வனத்துறை அறிவித்துள்ளது.

# ஆன்லைன் சூதாட்டத்தில் ரூ.3 லட்சத்தை இழந்த ஐ.டி. ஊழியர் தற்கொலை

கோயம்புத்தூர், ஆக. 18

கோவை மாவட்டம் கிணத்துக்கடவில்அண்ணா நகர் செம்மொழி கதிர் நகர் பகுதியை சேர்ந்தவர் ராஜகோபால். கட்டிட மேஸ்திரி. இவருடைய மனைவி புவனேஸ்வரி. இவர்களது மகன் ரஞ்சித்குமார் (24 வயது). இவர் பீளமேடு ஹோப் காலேஜ் பகுதியில் உள்ள ஒரு ஐ.டி. நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்தார்.

இதற்கிடையில் ரஞ்சித்குமார் ஆன்லைன் வர்த்தகம் மற்றும் சூதாட்டத்தில் ரூ.3 லட்சம் வரை இழந்ததாக தெரிகிறது. இதனால் மனநலம் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறப்படுகிறது. அத்துடன் கடந்த ஜூலை மாதம் 13ந் தேதி வீட்டில் அதிக அளவில் தூக்க மாத்திரை தின்று தற்கொலைக்கு முயன்றார். அவரைமருத்துவமனைக்கு அழைத்துசென்று குடும்பத்தினர் காப்பாற்றினர்.

இந்த நிலையில் நேற்று காலையில் வீட்டில் உள்ள ஒரு அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் ரஞ்சித்குமார்கிடந்தார்.அவரை குடும்பத்தினர் மீட்டு கோவையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதனைசெய்தமருத்துவர்கள், ரஞ்சித்குமார் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமதாஸ் தலைமையில் பாமக பொதுக்குழு கூட்டம்: முக்கிய முடிவுகள் எடுக்க வாய்ப்பு



திண்டிவனம், ஆக. 18

புதுச்சேரி திண்டிவனம் சாலையில் உள்ள சங்கமித்ரா அரங்கில் பா.ம.க.வின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தலைமையில் தொடங்கி நடைபெற்று வருகிறது.இந்தகூட்டத்தில் ராமதாசின் மகள் காந்திமதி கலந்து கொண்டுள்ளார். மேலும் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் என 4,000 பேர் பங்கேற்றுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக கட்சியின் நிறுவனர் ராமதாசால் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நிர்வாகிகளை அன்புமணி கட்சியில் சேர்ப்பதாக அறிவித்தார். இதன்படி இருவரும் மாறி மாறி அறிவிப்பு வெளியிட்டு வருவதால் பாமகவினர் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. பாமக இரு அணிகளாக செயல்பட்டு வருவதால், யாருடன் நிற்பது என்று தொண்டர்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

இதனிடையே கடந்த 9 ம் தேதி அன்புமணி தரப்பில் பொதுக்குழு கூட்டம் நடத்தப்பட்டது. அந்த பொதுக்குழுவில் பாமகவின் தலைவராக அன்புமணிக்கு ஓராண்டு பதவி நீட்டிப்பு அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுக்குழுவுக்கு தடை கேட்ட ராமதாஸ் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் ராமதாஸ் தரப்பு அதிர்ச்சி அடைந்தது

இதனிடையே, பாமக சிறப்பு பொதுக்குழு கூட்டத்திற்கு அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் அழைப்பு விடுத்திருந்தார். அதன்படி புதுச்சேரி திண்டிவனம் சாலையில், விழுப்புரத்தில் உள்ள சங்கமித்ரா அரங்கில் பா.ம.க.வின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் தற்போது தொடங்கி நடைபெற்று வருகிறது.

முன்னதாக பொதுக்குழுவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் செய்யப்பட்டிருந்தன. பொதுக்குழுவில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருப்பதாக ராமதாஸ் தெரிவித்துள்ளார். குறிப்பாக அன்புமணியின் அதிகாரத்தை நீக்கிவிட்டு ராமதாஸ் மகள் காந்திமதிக்கு கட்சியில் முக்கிய பொறுப்பு அளிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல பொதுக்குழுவில் புதிய இளைஞர் அணி தலைவரை நியமிக்க வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளன.

# தாம்பரம் சானிடோரியம் ரெயில் நிலையத்தில் 3 வயது குழந்தையை தவிக்கவிட்ட கொடூரன்

பரங்கிமலை, ஆக. 18

சென்னை கடற்கரையில் இருந்து தாம்பரம் நோக்கி சென்ற மின்சார ரெயில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தாம்பரம் சானடோரியம் ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. அப்போது ரெயில் பெட்டியில் இருந்த ஒரு கொடூரன், ரெயில் புறப்பட இருந்த நேரத்தில் சுமார் 3 வயது ஆண் குழந்தையை ரெயிலில் இருந்து கீழே இறக்கிவிட்டு சென்றுள்ளான்.

சானடோரியம் ரெயில் நிலையத்தில் அந்த குழந்தை சுற்றிக்கொண்டு இருந்தது. ரோந்து பணியில் இருந்த பரங்கிமலை ரெயில்வே பாதுகாப்பு போலீசார் ஆதரவின்றி தவித்த குழந்தையை மீட்டு பரங்கிமலை அழைத்து வந்தனர். அந்த குழந்தை யாருடையது? என்ற விவரங்கள் தெரியாததால் ஆலந்தூரில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு



அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

சானடோரியம் ரெயில் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது வாலிபர் ஒருவர் அந்த குழந்தையை ரெயிலில் இருந்து கீழே இறக்கி விட்டு செல்லும் காட்சி மிக தெளிவாக பதிவாகி இருந்தது. இந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

அந்த குழந்தை யார்? அவர் எதற்காக இறக்கி விட்டார்? குழந்தையை கடத்தி வந்தாரா? என்பது குறித்து ரெயில்வே போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ‘பொன்னியின் செல்வனைப் போல் திராவிட மாடல் ஆட்சி தொடரும்’ அமைச்சர் ரகுபதி





சென்னை, ஆக. 18

புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதி இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது த.வெ.க. மாநாடு, அமித்ஷாவின்வருகைஉள்ளிட்டபல் வேறு விஷயங்கள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

“எந்த தாக்கத்தையும் யாராலும் ஏற்படுத்த முடியாது. தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாம் பாகம் தொடரும், மூன்றாம் பாகம் தொடரும். அது பொன்னியின் செல்வனைப் போல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும்.

அமித்ஷாவால் தமிழகத்திற்கு வந்து எந்த வியூகத்தையும் வகுக்க முடியாது. தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடி முகவர்களை நியமிக்கவே அவர்கள் தடுமாறுகிறார்கள். எனவே அமித்ஷா எத்தனை முறை தமிழகத்திற்கு வந்தாலும் எங்களுக்கு அச்சமில்லை.

போலி வாக்காளர்களை சேர்க்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அசல் வாக்காளர்கள் தங்கள் அசல் வாக்குகளை செலுத்தினாலே போதும். எங்களுக்கு போலி வாக்காளர்கள் தேவையில்லை.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நாகர்கோவில், திருச்சி விரைவு ரெயில்களுக்கு கூடுதல் நிறுத்தம்

கோவை, ஆக. 18

கோவையில் இருந்து தினமும் 80க்கும் மேற்பட்ட ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. கொரோனா தொற்றுக்கு முன்பு வரை திருச்சி பாலக்காடு, கோவைநாகர்கோவில் பகல் நேர ரெயில்கள்மற்றும்கோவை சேலம்மெமுரெயில்ஆகிய ரெயில்கள் இருகூர் நிலையத்தில் நின்று சென்றன. இதனால் இருகூர் மற்றும் இருகூரை சுற்றியுள்ள பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பணி நிமித்தமாக வெளியூர் செல்வோர் மிகவும் பயனடைந்து வந்தனர்.

இந்த நிலையில் கொரோனா நோய்த் தொற்று காலத்தில் இந்த ரெயில்கள் இருகூரில் நிற்பது நிறுத்தப்பட்டன. இந்த நிலையில் திருச்சி பாலக்காடு, கோவை நாகர்கோவில் ரெயில்கள்இருகூரில்நின்று செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இருகூர் ரெயில் பயணிகள் மற்றும் பிற ரெயில் பயணிகள் சங்க நிர்வாகிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். கோவை நாகர்கோவில், திருச்சிபாலக்காடு ரெயில்கள் நாளை (திங்கட்கிழமை)முதல்சிங்காநல்லூர், இருகூர் நிலையங்களில் நின்று செல்லும் என்று சேலம் ரெயில்வே கோட்ட நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

இதுதொடர்பாக சேலம் ரெயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்சிபாலக்காடு டவுன் விரைவு ரெயில் (வண்டி எண்: 16843), பாலக்காடு டவுன்திருச்சி விரைவு ரெயில் (எண்: 16844), நாகர்கோவில் கோவை விரைவு ரெயில் (எண்: 16321), கோவை நாகர்கோவில் விரைவு ரெயில் (எண்: 16322) ஆகிய ரெயில்கள் சிங்காநல்லூர், இருகூர் ரெயில் நிலையங்களில் நாளை முதல் நின்று செல்லும். இதேபோல் கோவை நாகர்கோவில் ரெயில், நாகர்கோவில் கோவை ரெயில் மேலப்பாளையம், ஆரல்வாய்மொழி ஆகிய ரெயில் நிலையங்களிலும் நாளை முதல் நின்று செல்லும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இருகூர், சிங்காநல்லூர் ரெயில் பயணிகளிடையே இது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து, இருகூர் ரெயில் பயணிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வடிவேலு கூறுகையில், 5 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும், இந்த ரெயில்கள் இருகூரில் நிறுத்தப்படுவது மகிழ்ச்சி. இதே போல் கோவைசேலம் மெமு ரெயிலையும் மீண்டும் இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனறார்.

# ராமநாதபுரம்: ரெயில்வே கேட் மூடப்படாத விவகாரம்; கேட் கீப்பர் பணியிடை நீக்கம்

ராமநாதபுரம், ஆக.18

சென்னையிலிருந்து ராமேஸ்வரம் நோக்கி நேற்று இரவு சேது விரைவு ரெயில் சென்றுகொண்டிருந்தது. ராமநாதபுரம் ரெயில்நிலையத்தைகடந்து ராமேஸ்வரம் நோக்கி வாலாந்தரவை ரெயில்வே கேட் அருகே ரெயில் வந்த போது அப்பகுதியில் இருந்த ரெயில்வே கேட் மூடப்படாமல் இருந்தது.

இதனை கண்டு சுதாரித்துக் கொண்ட ரெயில் ஓட்டுநர், துரிதமுடன் செயல்பட்டு ரெயிலை நிறுத்தினார். இதனை தொடர்ந்து, ரெயிலை விட்டு கிழே இறங்கி வந்து கேட்டை மூடும்படி கேட் கீப்பரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து கேட் மூடப்பட்ட பின்னர் ரெயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. ரெயில் ஓட்டுநரின் சாமர்த்தியத்தால் விபத்து தவிர்க்கப்பட்டது.



இந்தநிலையில், ராமநாதபுரம் மாவட்டம் வாலாந்தரவை ரெயில்வே கேட் நேற்று காலை ரயில் கடக்கும்போது மூடப்படாமல் இருந்த விவகாரத்தில், அலட்சியமாக செயல்பட்டதாக வடமாநிலத்தைச் சேர்ந்த கேட் கீப்பர் ஜெயசிங் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரிடம் துறை ரீதியான விசாரணையும் நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

# 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெறும்: வைகோ பேட்டி

திருச்சி, ஆக. 18

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேற்று திருச்சியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மத்திய அரசு அரசியல் நோக்கோடு தங்களை எதிர்ப்பவர்களை அச்சுறுத்த வருமான வரி, அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை பயன்படுத்தி வருகிறது. அந்தவகையில் தான் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி உள்ளது.

இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் மேகங்கள் கூடி கலைவதை போல கட்சிகள் உருவாகி கொண்டு தினமும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. கூட்டணி அமைப்பது அவரவர் விருப்பம். ம.தி.மு.க.வை பொறுத்தவரை 8 ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் எடுத்த தீர்க்கமான முடிவான தி.மு.க.வை ஆதரிப்பது என்கிற அடிப்படையில் தொடர்ந்து ஆதரித்து வருகிறோம்.



2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி தான் மிகப்பெரிய வெற்றி பெறும். தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். தி.மு.க. கூட்டணியை யாராலும் உடைக்க முடியாது. அது நடக்கவே நடக்காது. ஆனால் வேண்டும் என்றே சிலர் திட்டமிட்டு ம.தி.மு.க. கூட்டணி மாற போகிறது என எங்கள் மீது களங்கம் ஏற்படுத்த பார்க்கிறார்கள். நாங்கள் பா.ஜனதாவுக்கு தூது விடுகிறோம். மந்திரி பதவிக்கு ஏங்குகிறோம் என்கிறார்கள். அது அப்பட்டமான முழு பொய்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருவள்ளூர் அருகே லாரி மீது கார் மோதிய விபத்து: 9 பேர் காயம்

திருவள்ளூர், ஆக. 18

திருவள்ளூர் மாவட்டம் ஆந்திர எல்லையான எளாவூர் சோதனைச் சாவடி அருகே சாலையில் நின்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதியது. இந்த கோர விபத்தில் காரில் இருந்த 9 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் சென்னையில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 பேரும் காரில் செல்லும் போது விபத்து நடந்தது. விபத்தில் படுகாயம்



அடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து எளாவூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நெல்லையில் பரபரப்பு; காதல் விவகாரத்தில் வாலிபருக்கு கத்திக்குத்து: பெண்ணின் தந்தைக்கு போலீஸ் வலைவீச்சு

நெல்லை, ஆக. 18

நெல்லை மாவட்டம் களக்காடு சிதம்பரபுரம் முத்துநகர் காலனியைச் சேர்ந்தவர் கார்த்திகேயன். இவருடைய மகன் சிவக்குமார் (வயது 29). கட்டிட தொழிலாளி. இவரும், இளம் பெண் ஒருவரும் கடந்த சில ஆண்டுகளாக காதலித்தனர்.

பின்னர் அவர்கள் பிரிந்து விட்டனர். இதற்கு அந்த பெண்ணின் தம்பியின் நண்பர்தான் காரணம் என்று கருதிய சிவக்குமார், அவரை செல்போனில் தொடர்பு கொண்டு மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. பின்னர் கோவில் கொடை விழாவிலும் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. சம்பவத்தன்று சிவக்குமார் தனது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த பெண்ணின் தந்தை, சிவக்குமாரிடம் ‘எதற்காக அடிக்கடி தகராறு செய்கிறாய்?’ என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் சிவக்குமாரின் மார்பில் குத்தியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த அவரை



சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.அங்குஅவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதுகுறித்த புகாரின்பேரில், களக்காடு போலீசார் வழக்குப்பதிவு செய்து, தலைமறைவான அந்த பெண்ணின் தந்தையான சந்திரனை(53) வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தீபாவளி தொடர் விடுமுறைக்கான ரெயில் முன்பதிவு தொடங்கியது

சென்னை, ஆக. 18

தீபாவளிப் பண்டிகை வரும் அக்டோபர் 20ஆம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது. இந்தாண்டு திங்கள்கிழமை வருவதால், முன்கூட்டியே சொந்த ஊர் செல்பவர்கள் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமையில் செல்வார்கள். அதன்படி, வரும் அக். 16 (வியாழன்) அன்று செல்பவர்களுக்கான ரெயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. இணையதளம் மற்றும் ரெயில் நிலைய முன்பதிவு கவுண்டர்களில் காலை 8 மணி முதல் அனைத்து வகுப்புகளுக்கும்முன்பதிவு நடைபெறுகிறது. குறிப்பாக, மதுரை, திருநெல்வேலி, தென்காசி ஆகிய இடங்களுக்கு புறப்படும் பாண்டியன், நெல்லை, பொதிகை விரைவு ரயில்களில் தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில்10நிமிடங்களிலேயே முன்பதிவு முடிந்து காத்திருப்போர் பட்டியல் காட்டியது.

# தவெக மாநாட்டுக்காக குடிநீர் மேலாண்மைக் குழு அமைப்பு

மதுரை, ஆக. 18

த.வெ.க. தலைவர் விஜய், தனது கட்சியின் முதல் மாநாட்டினை கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ந்தேதி விக்கிரவாண்டியில் நடத்தினார். அதன் தொடர்ச்சியாக தமிழக வெற்றிக்கழகத்தின் 2வது மாநில மாநாடு வருகிற 21ந்தேதி மதுரை பாரபத்தியில் நடைபெற உள்ளது. இதற்காக பிரமாண்டமாக ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. 200 அடி நீளமும், 60 அடி அகலம் கொண்ட மேடை அமைக்கப்பட்டு வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் நடந்து சென்று தொண்டர்களை பார்ப்பதற்காக 800 அடி தூரத்திற்கு நடைமேடையும் அமைக்கப்படுகிறது. மாநாடு மாலை 3.15 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெற உள்ளது.



இந்த நிலையில் ,தமிழக வெற்றிக் கழகத்தின் 2ஆவது மாநாட்டுக்காக குடிநீர் மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே விக்கிரவாண்டி மாநாட்டில் குடிநீர் கிடைக்காமல் தொண்டர்கள் சிரமப்பட்டனர் . இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள குழு அமைக்கப்பட்டுள்ளது.

# கல்லூரி மாணவிக்கு காதல் தொல்லை கொடுத்த வாலிபர் கைது

திருப்பத்தூர், ஆக. 18

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியைச் சேர்ந்தவர் நவீன்குமார் (வயது 27). இவர், திருப்பத்தூரில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் ஆய்வக உதவியாளராக வேலை பார்த்து வந்தார். அந்தக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும் 17 வயது மாணவியை, நவீன்குமார் காதலிப்பதாகக் கூறி தொல்லைகொடுத்து வந்தார்.

இதனால் மன உளைச்சலுக்கு ஆளான அந்த மாணவி, இதுகுறித்து தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதையடுத்து



மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் திருப்பத்தூர் டவுன் போலீசார் போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து நவீன்குமாரை கைது செய்தனர்.

# நாகை-இலங்கை கப்பலில் கடந்த ஓராண்டில் 20 ஆயிரம் பேர் பயணம்

நாகை, ஆக. 18

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் கப்பல் சேவையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். 'செரியாபாணி' என்ற பெயரில் இயக்கப்பட்ட இந்த கப்பலில் போதிய பயணிகள் வராத காரணத்தால் இந்த கப்பல் போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து கடந்த 2024ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16ந் தேதி 'சுபம்' நிறுவனத்தின் சார்பில் மீண்டும் 'சிவகங்கை' என்ற பெயரில் கப்பல் சேவை தொடங்கப்பட்டது. இந்த கப்பல்சேவைதொடங்கி நேற்றுடன் (16ந் தேதி) ஓராண்டு நிறைவு பெற்றது. இதையடுத்து இரண்டாம் ஆண்டு தொடக்க விழா நேற்று நடந்தது. இதில், மும்மதத்தை சேர்ந்தவர்கள் கொடியசைத்து 2ம் ஆண்டு சேவையை தொடங்கி வைத்தனர்.




பின்னர் கப்பல் நிறுவன உரிமையாளர் சுந்தர்ராஜன் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த ஒரு ஆண்டில் 20 ஆயிரத்து 98 பேர் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கும், இந்தியாவில் இருந்து இலங்கைக்கும் பயணம் செய்துள்ளனர். இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி நாகை துறைமுகத்தில்இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு செல்வதற்கு சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாணவர்கள் 3 பகல், 2 இரவு இலங்கையில் தங்குவதற்கு கப்பல் டிக்கெட் கட்டணத்தோடு ரூ.9 ஆயிரத்து 999 என சிறப்பு சலுகை திட்டம் உள்ளது. மாணவர்களை ஒருங்கிணைத்து அழைத்து வரும் 2 ஆசிரியர்களுக்கு இலவச டிக்கெட் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கடந்த ஜனவரி முதல் ஜூலை வரையில் தேவையின்றி ரெயில்களில் அபாய சங்கிலியை இழுத்த 96 பேர் மீது வழக்கு

சென்னை, ஆக. 18

சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து தினமும் 50க்கும் மேற்பட்ட எக்ஸ்பிரஸ் ரெயில்களும், 200க்கும் மேற்பட்ட மின்சார ரெயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பயணிகள் பாதுகாப்புக்காக ரெயில்வே போலீசார் மற்றும் ரெயில்வே பாதுகாப்பு படையினர் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களில் விதிமீறலில் ஈடுபடும் நபர்கள் மீது ரெயில்வே பாதுகாப்பு படையினர் வழக்கு பதிவு செய்து, அபராதம் விதித்து வருகின்றனர்.

ரெயில் நிலையத்துக்குள் தேவையின்றி சுற்றித்திரிபவர்கள் முதல் ரெயில் பயணிகளுக்கு தொந்தரவு அளிக்கும் வகையில் ஆட்டோக்கள் நிறுத்துவது வரை பல பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அந்தவகையில், எக்ஸ்பிரஸ் ரெயில்களில் அவசர காலத்தில் நிறுத்துவதற்காக பயன்படுத்தும் அபாய சங்கிலிகளை தேவையின்றி இழுத்து நிறுத்துபவர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு வருகிறது. தேவையின்றி ரெயில் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தால் சம்பந்தப்பட்டோருக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி சென்டிரல் ரெயில் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ரெயில்களின் அபாய சங்கிலியை தேவையின்றி இழுத்ததாக கடந்த 2023ம் ஆண்டு 210 பேர் மீதும், 2024ம் ஆண்டு 217 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக ரெயில்வே பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்தனர். நடப்பாண்டில்கடந்த ஜனவரி முதல் ஜூலை வரையில் அபாய சங்கிலியை இழுத்து ரெயில்களை நிறுத்தியதாக 96 பேர் மீது வழக்குப்பதியப்பட்டு அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

# 22ந்தேதி நடைபெறும் பா.ஜ.க. மாநாட்டில் கலந்துகொள்ளும் அமித்ஷா, தேசிய தலைவர்கள்.. ஏற்பாடுகள் தீவிரம்

சென்னை, ஆக. 18

மாநாட்டு பணிகளைதீவிரப்படுத்த நிர்வாகிகளை பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.


சட்டசபை தேர்தலை சந்திக்க அ.தி.மு.க.வுடன் பா.ஜனதா கூட்டணி வைத்துள்ளது. இரு கட்சிகளும் இணைந்து தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க திட்டமிட்டு உள்ளன. இந்தநிலையில், தமிழகம் முழுவதும் கட்சியை பலப்படுத்தும் பணியில் பா.ஜனதா தீவிரமாக இறங்கி உள்ளது.

அதன் ஒரு பகுதியாக புதிய மாநிலத்தலைவராக பொறுப்பேற்றுள்ள நயினார் நாகேந்திரன் தலைமையில் நெல்லையில் பூத் கமிட்டி மாநாடு நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த மாநாடு நேற்று நடக்க இருந்த நிலையில், நாகாலாந்து கவர்னர் இல.கணேசன் மறைவு காரணமாக அந்த மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.



இதற்கிடையே ஒத்தி வைக்கப்பட்ட மாநாடு வருகிற 22ந்தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா மற்றும் தேசிய தலைவர்கள் பங்கேற்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மாநாட்டு பணிகளை தீவிரப்படுத்த நிர்வாகிகளை நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக்கு தேவையான நிதியை ஒதுக்க வேண்டும்: அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஆக. 18

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தர்மபுரி மாவட்டத்தின் பெரும் பிரச்சினையே அங்கு வேளாண்மை, தொழில்துறை, சேவைத் துறை என எந்தத் துறையும் வலிமையாக இல்லாதது தான். அதனால்தான் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் வேலை தேடி வெளிமாநிலங்களுக்கும், வெளிமாவட்டங்களுக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதற்கு தீர்வு காணும் நோக்குடன்தான் தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மையை வளர்க்கும் வகையில் தர்மபுரி மற்றும் காவிரி உபரி நீர் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கடந்த 10 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் பலமுறை வலியுறுத்தி உள்ளேன்.

சட்டப்பேரவையில் பா.ம.க. உறுப்பினர்களும் பலமுறை இக்கோரிக்கையை வலியுறுத்தினார்கள். ஆனால், இந்த திட்டத்தை செயல்படுத்த அரசு துரும்பைக்கூட கிள்ளிப்போடவில்லை.

தர்மபுரி மாவட்ட மக்களும் தமிழ்நாட்டின் குடிமக்கள்தான். அவர்கள் செலுத்தும் வரியில்தான் அரசு செயல்பட்டு வருகிறது. முதலமைச்சரும், அமைச்சர்களும் அனுபவிக்கும் பல்வேறு வசதிகளுக்கு செலவு செய்யப்படும் நிதியில் அவர்களின் வரிப்பணமும் உள்ளது.

இவற்றையெல்லாம் அனுபவித்துக்கொண்டு அவர்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காக அவர்களை பழிவாங்குவதும், அவர்கள் மீது வன்மத்தை காட்டுவதும் நியாயமல்ல. அவற்றை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கைவிட்டுதர்மபுரிமாவட்ட வளர்ச்சிக்குத் தேவையான தர்மபுரி மற்றும் காவிரி உபரிநீர் திட்டம், சிப்காட் தொழில்வளாகம் ஆகியவற்றை செயல்படுத்த நிதிஒதுக்கீடு, தர்மபுரி மற்றும் மொரப்பூர் ரெயில் பாதை அமைக்க நிலம் கையகப்படுத்துதல் ஆகியவற்றுக்கான அறிவிப்புகளை நாளைய (இன்றைய) விழாவில் வெளியிடவேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 'மக்களின் வாக்குரிமையையும் பறிக்க மோடி அரசு முயற்சிக்கிறது' செல்வப்பெருந்தகை பேச்சு

சென்னை , ஆக. 18

சென்னையை அடுத்த பழவந்தாங்கலில் தென் சென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் அரசியல் சட்ட பாதுகாப்பு விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் அய்யம் பெருமாள் தலைமை தாங்கினார். இதில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கலந்து கொண்டு ஏழை, எளியவர்களுக்கு நல திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது :

மத்திய பா.ஜனதா அரசு பண மதிப்பிழப்பை ஏற்படுத்தியதோடு ஜி.எஸ்.டி. மூலம் நம் பணத்தையும் பறித்தது. மக்களின் வாழ்வுரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை என அனைத்து உரிமைகளையும் மோடி அரசு பறித்துவிட்டது. தற்போது நமக்கு உள்ள ஒரே உரிமையான வாக்குரிமையையும் தேர்தல் ஆணையம் உதவியுடன் பறிக்க முயற்சிக்கிறது. இருப்பவர்களுக்கு வாக்கு இல்லை. ஆனால் இல்லாதவர்கள் பெயரில் வாக்கு இருக்கிறது. நம் வாக்குரிமையை மட்டும் இழக்காமல் வரும் தேர்தலில் பா.ஜனதா மற்றும் அதன் ஆதரவு கட்சிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.



இவ்வாறு அவர் பேசினார்.

இதில் முன்னாள் மத்திய மந்திரி தங்கபாலு, மாவட்ட துணை தலைவர் சுதா பிரசாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்

# ரெயில்முன் பாய்ந்து வங்கி அதிகாரி தற்கொலை

திருநெல்வேலி ஆக. 18

நெல்லை பாளையங்கோட்டை டி.வி.எஸ். நகரைச் சேர்ந்தவர் சிவசங்கர் (40 வயது). இவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் 3 நாட்கள் தொடர் விடுமுறையையொட்டி, சிவசங்கர் குடும்பத்தினருடன் சொந்த ஊருக்கு வந்தார்.

அவர் தனது வீட்டின் அருகில் உள்ள ரெயில்வே தண்டவாளம் பகுதிக்கு சென்றார். அப்போது அந்த வழியாக வாஞ்சி மணியாச்சியில் இருந்து நெல்லை வழியாக திருச்செந்தூருக்கு பயணிகள் ரெயில் சென்று கொண்டிருந்தது.

அந்த ரெயில்முன் சிவசங்கர் திடீரென்று பாய்ந்தார். அவர் மீது ரெயில் மோதியதில் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதுபற்றி தகவல் அறிந்த நெல்லை சந்திப்பு ரெயில்வே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, சிவசங்கர் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஐகிரவுண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், மன அழுத்த பிரச்சினையால் சிவசங்கர் ரெயில்முன் பாய்ந்து தற்கொலை செய்தது தெரியவந்தது. மேலும் இதுதொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னை: சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவர் கைது

சென்னை ஓட்டேரியை சேர்ந்தவர் சுப்பிரமணி (வயது 67). இவர், 10 வயது சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச்சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிகிறது. இதுபற்றி சிறுமியின் தாயார் புளியந்தோப்பு அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தார்.

இந்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் சுப்பிரமணியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பனையூரில் இருந்துகொண்டு அரசியல் செய்வதா? விஜய் மீது செல்லூர் ராஜூ தாக்கு





மதுரை ஆக. 18

மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கூடல்நகர் 2வது வார்டில் ரூ.25 லட்சத்தில் கரிசல்குளம் கண்மாய் மறுகால்வாய்க்காலின்குறுக்கே புதிய பாலம் கட்டும் பணியை முன்னாள்அமைச்சர் செல்லூர் ராஜு நேற்று தொடங்கி வைத்தார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், "அமைச்சர் வீட்டில் ரெய்டு எல்லாம் தி.மு.க.வில்புதுசுஇல்லை. பல அமைச்சர்கள் வீட்டில் சோதனை நடைபெற்றுள்ளது. மாநகராட்சி விவகாரத்தில் அ.தி.மு.க புகார் அளித்ததன் காரணமாகவே முதல்அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். மாநகராட்சி விவகாரத்தில் குரல் கொடுத்த அ.தி.மு.க. மீது தி.மு.க. நிலைக்குழு தலைவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருமாவளவன் திசை தெரியாத காட்டுக்குள் சென்றுவிட்டார். அவருடைய தலைமை பண்பை விமர்சிக்கக்கூடிய அளவில் ஆகிவிட்டார். ஜெயலலிதாவின் பண்பை பேசியவர் திருமாவளவன். திருமாவளவனுக்கு என்ன நெருக்கடி வந்தது என தெரியவில்லை.

விஜய் பனையூரில் இருந்து கொண்டு அரசியல் செய்வது விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. விஜய் களத்திற்கு வரவேண்டும். எல்லோரும் களத்திற்கு வந்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். இமேஜை வைத்து வெற்றி பெறலாம் என்று நினைத்தால் மக்கள் ஏற்க மாட்டார்கள்.

நாங்கள் வெளியில் வந்தால் இடையூறு ஏற்படும் என திரும்ப திரும்ப சொன்னால் எப்படி ? விஜய் வெளியில் வந்து மக்களை சந்திக்க வேண்டும். எல்லாரும் எம்.ஜி.ஆராக வேண்டும் என்று நினைக்கிறார்கள். எப்போதும் ஒரே ஒரு எம்.ஜி.ஆர். தான். எடப்பாடி பழனிசாமி செல்லும் இடமெல்லாம் மக்கள் வெள்ளம் வருகிறது" என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்தார்.

# பல பெண்களுடன் கணவருக்கு தொடர்பு: 12வது மாடியில் இருந்து குதித்து இளம்பெண் தற்கொலை

சென்னை ஆக. 18

ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் ஜோதீஸ்வரி (30 வயது). எம்.பி.பி.எஸ்., எம்.எஸ். படித்துள்ளார். மீனம்பாக்கத்தில் உள்ள மத்திய அரசு மருத்துவமனையில் டாக்டராக பணியாற்றி வந்தார். சென்னை கோடம்பாக்கத்தில் வாடகைக்கு அறை எடுத்து வசித்து வந்தார். இவருக்கும், ராமநாதபுரத்தை சேர்ந்த யோதீஸ்வரன் (34 வயது) என்பவருக்கும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் திருமணம் நடந்தது. என்ஜினீயரான யோதீஸ்வரன், துரைப்பாக்கத்தில் உள்ள தனியார் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

திருமணம் முடிந்து கணவன்மனைவி இருவரும் 3 மாதங்கள் மட்டுமே ஒன்றாக வாழ்ந்தனர். அதன்பின்னர்இருவருக்கும்இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் யோதீஸ்வரன், மனைவியை பிரிந்து சொந்த ஊருக்கே சென்று வீட்டில் இருந்தே பணிபுரிந்து வந்தார். அவ்வப்போது, மனைவியை பார்க்க வந்து சென்றதாக தெரிகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சுதந்திர தின விழா விடுமுறை என்பதால், பெருங்களத்தூர் ஸ்ரீராம் கேட்டில் 12 மாடிகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் தனது சகோதரி முத்துலட்சுமி வீட்டுக்கு ஜோதீஸ்வரி சென்றார். பின்னர் மாலையில் தனது வீட்டுக்கு புறப்படுவதாக சொல்லிவிட்டு கிளம்பிய ஜோதீஸ்வரி, கீழே செல்லாமல் மேலே சென்றார். மொட்டை மாடிக்கு சென்றதும் தனது செருப்பு, கைப்பையை கழற்றி வைத்துவிட்டு 12வது மாடியில் இருந்து கீழே குதித்தார். இதில், தலையில் படுகாயம் அடைந்த ஜோதீஸ்வரி, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.



இதுகுறித்து தகவல் அறிந்துவந்த பீர்க்கன்காரணை போலீசார் தற்கொலை செய்த ஜோதீஸ்வரி உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். ஜோதீஸ்வரிக்கு திருமணம் ஆகி 10 மாதங்களே ஆவதால் இதுபற்றி தாம்பரம் ஆர்.டி.ஓ. விசாரணைக்கும் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் தற்கொலை செய்வதற்கு முன்பாக ஜோதீஸ்வரி எழுதிய உருக்கமான கடிதம் போலீசாரிடம் சிக்கியது. இது தொடர்பாக போலீசார் கூறியதாவது:

யோதீஸ்வரன் மனைவிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கஞ்சா பழக்கம் உள்பட பல்வேறு தீய பழக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். அத்துடன் டேட்டிங் செயலி மூலமாக 30க்கும் மேற்பட்ட பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு திருமணத்துக்கு பிறகும் தொடர்ந்து அவர்களுடன் பழகி வந்துள்ளார்.

ஜோதீஸ்வரி, கணவரின் லேப்டாப்பை பரிசோதனை செய்தபோது, அவர் பல பெண்களுடன் தொடர்பில் இருக்கும் விஷயம் தெரிய வந்து மனம் உடைந்தார். இந்த நிலையில் கோடம்பாக்கத்தில் தாயுடன் அறை எடுத்து தங்கி இருந்த ஜோதீஸ்வரி, நேற்று அக்கா வீட்டுக்கு சென்ற போதுதான் இந்த சோக முடிவை எடுத்து உயிரை மாய்த்துக்கொண்டது தெரியவந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

# ராகுல் காந்தியின் வாக்குரிமையை தேர்தல் ஆணையம் ரத்து செய்யவேண்டும்: அர்ஜூன் சம்பத்

திருப்பூர், ஆக. 18

திருப்பூரில் இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

உலக அரங்கில் இந்தியா வல்லரசாக உருவாகி வருகிறது. இதனால் அமெரிக்க அதிபர் டிரம்ப் பொறாமை கொண்டு பொருளாதாரத்தைசீர்குலைக்க இந்திய பொருட்கள்மீதான வரியை உயர்த்தியுள்ளார். அமெரிக்க, சீன பொருட்களை புறக்கணிப்போம். உள்நாட்டில் தயாராகும் பொருட்களையே வாங்குவோம்.

நாம் இந்திய நிறுவனங்களை ஆதரித்து பொருளாதாரத்தைமேம்படுத்தவேண்டும்.தமிழகஅரசு,தூய்மைப்பணியாளர்கள் மீது அடக்குமுறையை ஏவி உள்ளது. அவர்களது நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். திருப்பூரிலும் தூய்மை பணியை தனியாரிடம் ஒப்படைப்பதை கண்டிக்கிறோம். ராகுல்காந்தி எம்.பி. தொடர்ந்து தேர்தல் ஆணையத்தை விமர்சித்து வருகிறார். அவரது வாக்குரிமையை தேர்தல் ஆணையம் ரத்து செய்யவேண்டும். உண்மையிலேயே வாக்குகளை திருடுவது காங்கிரசும், திமுகவும்தான். கோவையில் அண்ணாமலை ஜெயித்துவிடக்கூடாது அவருக்கு வாக்களிப்பவர்களின் ஓட்டுகளை நீக்கினார்கள். இவ்வாறு அவர் கூறினார்."பாடத்தி ட்டத்தில் நீதிமன்றம் தலையிடாது" மதுரை ஐகோர்ட்டு

தமிழக கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழை பாடமாக சேர்க்க, தமிழாசிரியர்களை நிரந்தர பணியமர்த்த கோரி மதுரை ஐகோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, கேந்திரிய வித்யாலயா பாடதிட்டத்தில் நீதிமன்றம் தலையிடாது என கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# இந்தித் திணிப்பும் தமிழ் ஒழிப்புமே ரெயில்வேயின் இரட்டை தண்டவாளங்களாக இருக்கிறது சு.வெங்கடேசன்

மதுரை ஆக. 18

தெற்கு ரெயில்வே இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வுக்கு நடத்தப்பட்ட தேர்வை ரத்து செய்துவிட்டு, தமிழ் கேள்வித்தாளுடன் மறுதேர்வு நடத்த வேண்டும் என்று மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: மத்திய அரசின்துறைகளுக்கு இதுவே வேலையாகி விட்டது. இந்தி மீதான விசுவாசத்தை அவ்வப்போது வெளிப்படுத்துவதில் அவர்களுக்கு ஆனந்தம். ஆகஸ்ட் 10, 2025 நடத்தப்பட்ட தென்னக ரெயில்வே இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு காலியிடத் தேர்வில் கேள்வித் தாள் இந்தி, ஆங்கிலத்தில் மட்டுமே தரப்பட்டுள்ளது. மாநில மொழி உள்ளிட்ட மூன்று மொழிகளில் கேள்வித் தாள் தரப்பட வேண்டுமென்ற நடைமுறை அப்பட்டமாக மீறப்பட்டுள்ள து. இது மொழி உரிமை மீதானதாக்குதல் ஆகும். மத்திய அரசுத் துறையின் தொடர்ந்த ஓரவஞ்சனையின் வெளிப்பாடே. ஆகவே மேற்கண்ட தேர்வை ரத்து செய்து மறு தேர்வு தமிழ் கேள்வித்தாள் உ ள்ளிட்டு தரப்பட்டு நடத்தப்பட வேண்டுமென்று ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கும், தென்னக ரயில்வே பொது மேலாளருக்கும் கடிதம் எழுதி உள்ளேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 'யூடியூப்' பார்த்து பங்கு சந்தையில் முதலீடு.. லட்சங்களை இழந்த பெண்.. அடுத்து நடந்த கொடூரம்

சென்னை ஆக. 18

சென்னை பல்லாவரம் அடுத்த பொழிச்சலூர், ஞானமணிநகர் 3வது தெருவைச் சேர்ந்தவர் அருண் (வயது 44). இவர் தனது மனைவி வனஜா (38) மற்றும் மகன்களுடன் சொந்த வீட்டில் வசித்து வருகிறார். மாற்றுத் திறனாளியான அருண், பெயிண்டிங் டிசைனர் ஆக பணிபுரிந்து வருகிறார்.

வனஜா, 'யூடியூப்' பார்த்து ஆன்லைனில் பங்கு சந்தையில்சிறிய அளவில் முதலீடு செய்தார். அதில் இரட்டிப்பு மடங்கு பங்கு உயர்ந்து வருமானம் வந்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிக பணம் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என எண்ணிய வனஜா, தனது கணவருக்கு தெரியாமல் கடன் செயலி மூலம் ரூ.2.5 லட்சம் கடன் பெற்று பங்குச் சந்தையில் முதலீடு செய்தார்.



ஆனால் அதில் அவருக்கு எந்த லாபமும் கிடைக்கவில்லை. முதலீடு செய்த பணத்தையும் இழந்து விட்டதாக தெரிகிறது. இதனால் வாங்கிய கடனை கொடுக்க முடியாமல் அவதிப்பட்டு வந்தார். மேலும் கடனை கேட்டு தனியார் வங்கி ஊழியர்கள் நெருக்கடி கொடுத்ததாகவும் தெரிகிறது.

இதனால் மனம் உடைந்த வனஜா, தனது வீட்டில் யாரும் இ்ல்லாத போது தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுபற்றி தகவல் அறிந்துவந்த போலீசார், வனஜா உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இதனிடையே தற்கொலை செய்த வனஜாவின் செல்போனை போலீசார் ஆய்வு செய்தனர். அதில் தற்கொலைக்கு முன்னதாக அவர், பதிவு செய்து வைத்திருந்த 3 ஆடியோக்கள் இருந்தது. அதில் ஒரு ஆடியோவில், "நான் தனியார் வங்கியில் ரூ.2.5 லட்சம் கடன் வாங்கியதால் கடனை கேட்டு நெருக்கடி கொடுத்தனர். இதனால் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறி தனது கணவருக்கு 'வாட்ஸ்அப்'பில் அனுப்பிவிட்டு அவர் தற்கொலை செய்திருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

தின கனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
18.8.2025

# குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க தடை: சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

தென்காசி, ஆக. 18

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த 3 நாட்களாக மாலை நேரங்களில் சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது. நேற்று காலை குற்றாலம் சுற்றுவட்டார மேற்கு தொடர்ச்சி வனப் பகுதியில் கனமழை பெய்தது. இதனால் குற்றாலம் அருவிகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி குற்றாலம் அருவிகளில் குளிக்க போலீசார் தடை விதித்தனர். நேற்று முன்தினம் சுதந்திர தினம் என்பதால் விடுமுறையை கொண்டாடுவதற்காக வெளியூர்களில் இருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர். நேற்று வெள்ளப்பெருக்குகுறைந்ததால் குற்றாலம்பிரதானஅருவி, ஐந்தருவி, சிற்றருவி, புலியருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது .

இந்த நிலையில், அருவியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் இன்று குற்றாலம் மெயின் அருவி மற்றும் பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். அதே சமயம் ஐந்தருவி, சிற்றருவி, புலியருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரக்கோணம்-சேலம் பயணிகள் ரெயிலுக்கு கூடுதல் நிறுத்தம்

சேலம், ஆக. 18

அரக்கோணத்தில் இருந்து காலை 5.15 மணிக்கு சேலத்துக்கு பயணிகள் ரெயில் புறப்படுகிறது. மறுமார்க்கமாக, சேலத்தில் இருந்து மதியம் 3.30 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்கிறது. இந்த ரெயில் வேலூர் மாவட்டத்தில் உள்ள வளத்தூர், மேல்பட்டி ஆகிய இரு ரெயில்நிலையங்களிலும் நின்று செல்ல வேண்டுமென பயணிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வந்தனர்.

இந்த நிலையில், பயணிகளின் கோரிக்கையை ஏற்று அரக்கோணம்சேலம் பயணிகள் ரெயில் (வண்டி எண் 16087) நாளை (திங்கட்கிழமை) முதல் வேலூர் மாவட்டத்தில் உள்ள வளத்தூர், மேல்பட்டி ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும். மேலும் மறுமார்க்கமாக சேலம்அரக்கோணம் பயணிகள் ரெயில் (வண்டி எண் 16088) வளத்தூர் ரெயில் நிலையத்தில் மட்டும் நின்று செல்லும்.

இந்த தகவல் சேலம் ரெயில்வே கோட்ட அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (18.8.2025)

மேஷம்: உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்கும்நாள்.புதியமுயற்சிகள் நல்ல விளைவு தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

ரிஷபம்: பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணலாம். தொழிலில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உடல்நலத்தை கவனிக்கவும்.

மிதுனம்: சில சின்ன சிக்கல்கள் இருந்தாலும் நாளை சாதகமான சூழல்அமையும்.நண்பர்களின் ஆதரவு உண்டு.

கடகம்: குடும்பத்தில் நல்லிணக்கம் கூடும். சிந்தனைகள் பலன் தரும். நிலம், வீடு தொடர்பான விஷயங்களில் சாதகமான முன்னேற்றம்..

சிம்மம்: உழைப்பால் உயர்வு காணலாம். பணவரவு கூடும். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

கன்னி: விளையாட்டுத்தனமான எண்ணங்களை விட்டு விடுங்கள். முக்கியமான முடிவுகளில் கவனமாக இருங்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும்.

துலாம்: சில சிக்கல்கள் இருந்தாலும் பொறுமையுடன் சமாளிக்க முடியும். வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு.

விருச்சிகம்: உங்கள்முயற்சிகள்பாராட்டப்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும்.


தனுசு: வெளிநாட்டு தொடர்புகள் நல்ல பலன் தரும். கல்வியில் சிறப்பு. பயணத்திற்கு சாதகமான நாள்.

மகரம்: உழைப்பால் நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். மனநிம்மதி கூடும்.

கும்பம்: புதியநண்பர்கள்அறிமுகமாகும். தொழிலில் வளர்ச்சி காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மீனம்: கடினஉழைப்பிற்குசிறந்தபலன் கிடைக்கும். கடன் தொடர்பான சிக்கல்கள் தீரும். நற்பெயர் கிடைக்கும் நாள்.

# மருத்துவ மாணவர் சேர்க்கை; இடைத்தரகர்களை நம்ப வேண்டாம் அருண் ஐ.பி.எஸ். எச்சரிக்கை



சென்னை, ஆக. 18

மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு இடைத்தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என மத்திய குற்றப்பிரிவு அறிவுரை வழங்கியுள்ளது. இது தொடர்பான குறைதீர் கூட்டத்தில் பேசிய ஐ.பி.எஸ். அதிகாரி அருண், மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தருவதாக கூறும் இடைத்தரகர்களை நம்பாதீர்கள் என அறிவுறுத்தியுள்ளார்.

மருத்துவபடிப்பு குறித்த சந்தேகங்களுக்கு கல்லூரிகளில் உள்ள நேரடி சேர்க்கைமையத்தை தொடர்பு கொண்டு ஆலோசனை பெற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். மருத்துவ மாணவர் சேர்க்கையானது நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் மதிப்பெண்கள் மற்றும் தரவரிசைப்பட்டியல் அடிப்படையிலானது என்றும்,

அரசின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் நடத்தப்படும் கலந்தாய்வு மூலம் மட்டுமே மருத்துவம் படிக்க இடம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சீமை கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பான வழக்கு; அரசின் அறிக்கையை ஏற்க ஐகோர்ட்டு மறுப்பு




சென்னை, ஆக. 18

தமிழ்நாட்டில் சீமை கருவேல மரங்களை அகற்ற தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்டோர் தொடர்ந்த வழக்கு ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழகம் முழுவதும் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுத்தும் எந்த முன்னேற்றமும் இல்லை என குறிப்பிட்ட நீதிபதிகள், தற்போது வரை 713 கிராமங்களில் மட்டும் சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளதாகஅரசுதரப்பில்தாக்கல்செய்யப்பட்ட அறிக்கைக்கு அதிருப்தி தெரிவித்தனர்.

மேலும் சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்ட கிராமங்கள், மாவட்டங்களின் விவரங்கள் இல்லாததால் தமிழக அரசின் அறிக்கையை ஏற்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர். இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்த நீதிபதிகள், முறையாக அறிக்கை தாக்கல் செய்ய அரசுக்கு உத்தரவிட்டு ஆகஸ்ட் 29ந்தேதிக்கு வழக்கை தள்ளிவைத்தனர்.

# திருநங்கை போலீஸ் வீட்டில் 11 பவுன் நகைகள் திருட்டு




புதுக்கோட்டை ஆக. 18

புதுக்கோட்டை டவுன் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் போலீசாக பணியாற்றி வருபவர் சம்யுக்தா (29 வயது). திருநங்கையான இவர் திருக்கோகர்ணம்போலீஸ் நிலையம் பின்புறம் உள்ள காவலர் குடியிருப்பில் 'பி' பிளாக்கில் 2வது தளத்தில் வசித்து வருகிறார். இவரது சொந்த ஊர் தேனி மாவட்டம் ஆகும்.

இவர் நேற்று காலை பணிக்கு வருவதற்கு முன்பு வீட்டை பூட்டி விட்டு சாவியை, வீட்டு வாசலில் உள்ள காலணியில் மறைத்து வைத்து விட்டு வந்தார். பின்னர் பணி முடிந்து மதியம் வீட்டிற்கு சென்றார். அப்போது காலணியில் வீட்டின் பூட்டு சாவியை தேடிய போது அதில் இல்லை. சாவி காணாததைகண்டுதிடுக்கிட்டார்.

இதையடுத்து சம்யுக்தா வீட்டின்பூட்டைஉடைத்து உள்ளே சென்று பார்வையிட்டார். அப்போது பீரோவில் வைத்திருந்த 10¾ பவுன் தாலிச்சங்கிலி, 1 பவுன் சங்கிலி, வைரத்தோடு 1 ஜோடி ஆகியவை திருட்டு போயிருந்தது. இதனால் அவர் அதிர்ச்சியடைந்தார். மர்ம ஆசாமிகள் யாரோ வீட்டின் சாவியை எடுத்து கதவை திறந்து நகைகளை திருடிச் சென்றிருக்கலாம் என கருதினார். இதுகுறித்து திருக்கோகர்ணம் போலீசில் புகார் அளித்தார்.

இதையடுத்து போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். மேலும் தடயவியல் நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரித்தனர். வீட்டில் ஆள் இல்லாததையும், காலணியில் சாவியை மறைத்து வைத்திருப்பதையும் நோட்டமிட்டு மர்ம ஆசாமிகள் கைவரிசை காட்டியிருக்கலாம் என போலீசார் கருதுகின்றனர்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக திருக்கோகர்ணம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் மர்ம ஆசாமிகளை வலை வீசி தேடி வருகின்றனர். இந்த திருட்டு சம்பவம் காவலர் குடியிருப்பில் போலீஸ் குடும்பத்தினர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சென்டர் மீடியனில் பைக் மோதி விபத்து வாலிபர் பலி

தூத்துக்குடி ஆக. 18

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகில் உள்ள மீனம்பட்டியைச் சேர்ந்த தாஸ் மகன் அஜய்தேவ் (வயது 18). இவர் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ளகாமநாயக்கன்பட்டி கோவில் திருவிழாவிற்கு வந்துள்ளார். பின்னர் இன்று அதிகாலை தனது ஊருக்கு பைக்கில் சென்று கொண்டிருந்தார்.

கோவில்பட்டி, துறையூர் ஈராச்சி விலக்கு ரோட்டில் சென்றபோது, திடீரென பைக் நிலை தடுமாறி சென்டர் மீடியனில் மோதியது. இந்த விபத்தில் பலத்த காயம் அடைந்த அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து கொப்பம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அவரது உடல் பரிசோதனைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# நிதி அகர்வால் பிறந்தநாளையொட்டி "தி ராஜாசாப்" படத்தின் சிறப்பு போஸ்டரை வெளியிட்ட படக்குழு




தமிழில் கடந்த 2021ம் ஆண்டு நடிகர் ரவிமோகனுக்கு ஜோடியாக ''பூமி'' படத்தின் மூலம் அறிமுகமான நடிகை நிதி அகர்வால்தனது32வதுபிறந்தநாளைஇன்றுகொண்டாடுகிறார். பாலிவுட்டில் கடந்த 2016ல் சபீர்கான் இயக்கத்தில் வெளியான முன்னா மைக்கேல் படத்தில் நடித்திருந்த நிதி அகர்வால், தொடர்ந்து 2018ல் தெலுங்கில் சவ்யஸச்சி உள்ளிட்ட படங்களில் நடித்தார். தமிழில் சிம்புவுடன் ''ஈஸ்வரன்'' படத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்த நிதி சமூக வலைதளத்தில் ஆக்டிவாக இருந்து புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார்.

நிதி அகர்வால், தன்னுடைய 32வது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார். இதனால் சமூக வலைதளங்களில் ரசிகர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

தெலுங்குதிரைஉலகில்முன்னணிநடிகராக இருந்துவருபவர் பிரபாஸ். இவரது நடிப்பில் சமீபத்தில் 'கல்கி 2898 ஏடி' படம் மாபெரும் வெற்றி பெற்று வசூலை வாரி குவித்தது. அதனை அடுத்து தற்போது, மாருதி இயக்கத்தில் ஹாரர் காமெடி கதைக்களத்தில் உருவாகும் 'தி ராஜா சாப்' படத்தில் நடித்து வருகிறார். பீப்பிள் மீடியா பேக்டரி மற்றும் ஜிஎஸ்கே மீடியா ஆகிய தயாரிப்பு நிறுவனங்கள் இணைந்து இந்த படத்தினை தயாரிக்கிறது. இப்படத்தில் மாளவிகா மோகனன், நிதி அகர்வால், யோகி பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். தமன் இசையமைத்து வருகிறார்.

இந்தநிலையில், நிதி அகர்வால் பிறந்தநாளையொட்டி 'தி ராஜா சாப்' படத்தின் சிறப்பு போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. காமெடி கலந்த ஹாரர் கதைக்களத்தில் உருவாகிவரும் இப்படம் வருகிற டிசம்பர் மாதம் 5ம் தேதி வெளியாக உள்ளது.

# "பரதா" படத்தின் விமர்சனம் நன்றாக இருந்தால் திரையரங்குக்கு வாருங்கள் அனுபமா

'பிரேமம்' படம் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் அனுபமா பரமேஸ்வரன். அப்படத்தின் இமாலய வெற்றியின் மூலம்தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளிலும்நடிக்கதுவங்கினார். தமிழில்தனுஷ் உடன் 'கொடி' படத்தில்நடித்திருந்தார். தெலுங்கில், 'கார்த்திகேயா 2', '18 பேஜஸ்', 'டில்லு ஸ்கொயர்' ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். இப்படங்கள் வசூல் ரீதியாக பெரிய வெற்றியைப் பெற்றதால் அனுபமா தன் சம்பளத்தை உயர்த்தியுள்ளதாக கூறப்படுகிறது. அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் வெளியான டிராகன் படத்தின் கீர்த்தி என்ற கதாபாத்திரத்தில் வரவேற்பை பெற்றார்.

அனுபமாபரமேஸ்வரன்பரதா என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். படத்தின் பிரீ ரிலீஸ் மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா நிகழ்ச்சி அண்மையில் நடைப்பெற்றது. இப்படத்தை பிரவீன் கண்ட்ரேகுலா இயக்கியுள்ளார். பிரவீன் இதற்கு முன் சினிமா பண்டி மற்றும் சுபம் திரைப்படங்களை இயக்கியது குறிப்பிடத்தக்கது. பரதா திரைப்படம் தெலுங்கு மற்றும் மலையாள மொழியில் வெளியாக இருக்கிறது. திரைப்படம் வரும் 22ம் தேதி வெளியாக இருக்கிறது.

பரதா கட்டாயமாக அணியும் வழக்கத்தை வைத்திருக்கும் கிராமத்தில் இருந்து அனுபமா வருகிறார், அவர் ஒரு பயணத்தில் மற்ற பெண்களை மற்றும் உலகை புரிந்துக் கொள்ளும் காட்சிகள் டிரெய்லரில் இடம் பெற்றுள்ளது.

சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன்றில் அனுபமா "எங்களிடம் விமர்சகர்களுக்கு நல்ல விமர்சனம் எழுத சொல்லி கொடுக்க பணம் இல்லை. இப்படத்தின் மீது வெளிவரும் விமர்சனங்கள் அனைத்தும் மக்களின் இயற்கை வெளிபாடாக தான் இருக்கும். விமர்சங்கள் நன்றாக இருந்தால் படத்தை திரையரங்கில் காண வாருங்கள் இல்லையெனில் இப்படத்தை நீங்கள் பார்க்க வேண்டாம்" என கூறியுள்ளார்.

# இந்த பிரபஞ்சம் மனிதர்களுக்கானது மட்டும் அல்ல இயக்குநர் வசந்த்

தெரு நாய் கடியால் டெல்லியில் நிறைய பேர் பாதிக்கப்பட்ட நிலையில், தெருநாய்க்கடி சம்பவங்களை தாமாக முன்வந்து உச்ச நீதிமன்றம் விசாரித்தது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி பர்திவாலா, மகாதேவன் அமர்வு, 8 வாரங்களுக்குள் தலைநகர் டெல்லியில் சுற்றித் திரியும் அனைத்து தெரு நாய்களையும் பிடித்து, நாய் காப்பகங்களில் அடைக்க வேண்டும் என அதிரடி உத்தரவு பிறப்பித்தது.

இதை நாய் பிரியர்கள் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்கள் எதிர்க்கின்றனர். இன்று திருச்சி மற்றும் சென்னையில் இந்த முடிவை கண்டித்து பேரணி நடத்தப்பட்டது.

சென்னையில் நடந்த பேரணியில் நடிகைகள் வினோதினி வைத்தியநாதன், சாயா வரலட்சுமி, அம்மு ராமச்சந்திரன், இயக்குனர் வசந்த், உட்பட 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அதில் இயக்குநர் வசந்த் பேசியதாவது "உயிர்களிடம் அன்பு காட்டு என வள்ளலார் கூறினார். மனிதர்களுக்கானது மட்டுமே இல்லை இந்த பிரபஞ்சம். எல்லாம் உயிர்களுக்கும் சமமானது. அந்த கண்ணோட்டத்தில் இதை நாம் அணுக வேண்டும். டெல்லியில் தினமும் கற்பழிப்பு சம்பவங்கள் 67 நடக்கிறது, கொலை சம்பவங்கள் 80 நடக்கிறது, சாலை விபத்தில் இறப்பு 462 நடக்கிறது. நாய்கள் கடித்து இறக்கும் சதவீதம் 0.15 மட்டுமே. இதை வாக்குவாதமாக முன்வைக்கவில்லை தெருநாய்க்களை தெரு நாய்கள் என கூறுவதே தவறு. அதனை அடைத்து வைப்பது அனைத்திர்க்கும் தீர்வல்ல" என கூறியுள்ளார்.

# ஆசிய கோப்பை: இந்திய அணியில் கில், சிராஜ் இடம்பெறுவார்களா..? வெளியான புதிய தகவல்




நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை வங்காளதேசம் உள்பட 8 அணிகள் பங்கேற்கும் 17வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) அடுத்த மாதம் (செப்டம்பர்) 9ந்தேதி முதல் 28ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் அபுதாபியில் நடக்கிறது. இந்த தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10ந் தேதி துபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14ந் தேதி துபாயிலும், ஓமனை செப்.19ந் தேதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி செப்.28ந் தேதி துபாயில் அரங்கேறுகிறது.

இந்த தொடருக்கான இந்திய அணி நாளை (19ம் தேதி) அறிவிக்கப்பட உள்ளது. தலைமை பயிற்சியாளர் கம்பீர், தேர்வுக்குழு தலைவர் அகர்கர் மற்றும் கேப்டன் சூர்யகுமார் யாதவ் ஆகியோர் கலந்தாலோசித்து அணியை தேர்வு செய்து அறிவிக்க உள்ளனர்.

இந்த அணியில் யார்யாரெல்லாம் இடம்பெற போகிறார்கள்? என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. மேலும் இந்த தொடருக்கான இந்திய அணி குறித்து பல்வேறு தகவல்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் ஆசிய கோப்பைக்கான இந்திய அணியில் 'ஆண்டர்சன் தெண்டுல்கர்' (இங்கிலாந்து டெஸ்ட் தொடர்) தொடரில் அசத்திய பேட்ஸ்மேன் சுப்மன் கில் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் ஆகியோருக்கு இடமில்லை என தகவல் வெளியாகி உள்ளது.

அணியில் இடம்பெற சுப்மன் கில் ஜெய்ஸ்வால் இடையே கடும் போட்டி நிலவிய நிலையில், இந்திய தேர்வுக்குழு ஜெய்ஸ்வாலை தேர்வு செய்ய முடிவெடுத்துள்ளதாக கூறப்படுகிறது. மறுபுறம் ஜஸ்பிரித் பும்ரா விளையாட உள்ளதால் சிராஜிக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அதேபோல 2வது விக்கெட் கீப்பராக ஜிதேஷ் சர்மா தேர்வு செய்யப்படலாம் என கூறப்படுகிறது.

# புச்சிபாபு கோப்பை கிரிக்கெட்: சென்னையில் இன்று தொடக்கம்



தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில், புச்சிபாபு கோப்பைக்கானஅகிலஇந்தியஅழைப்புகிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று முதல் அடுத்த மாதம் 9ந் தேதி வரை நடக்கிறது. கோஜன், குருநானக், பச்சையப்பா கல்லூரி உள்பட பல்வேறு மைதானங்களில் இந்த போட்டி அரங்கேறுகிறது. இதில் பங்கேற்கும் 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி 'ஏ' பிரிவில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் லெவன், இமாச்சலபிரதேசம், சத்தீஷ்கார், மராட்டியமும், 'பி' பிரிவில் இந்தியன் ரெயில்வே, ஜம்முகாஷ்மீர், ஒடிசா, பரோடாவும், 'சி' பிரிவில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க லெவன், மும்பை, அரியானா, பெங்காலும், 'டி' பிரிவில் ஐதராபாத், பஞ்சாப், மத்தியபிரதேசம், ஜார்கண்டும் இடம் பிடித்துள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும். லீக் ஆட்டங்கள் 3 நாட்களும், அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி 4 நாட்களும் நடைபெறும்.

இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கும் ஆட்டங்களில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் லெவன் இமாச்சலபிரதேசம், தமிழ்நாடு கிரிக்கெட் சங்க லெவன் மும்பை, சத்தீஷ்கார் மராட்டியம் ஆகிய அணிகள் மோதுகின்றன.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்க லெவன் அணியின் கேப்டனாக ஷாருக்கானும், தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் லெவன் அணியின் கேப்டனாக பிரதோஷ் ரஞ்சன் பாலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ருதுராஜ் கெய்க்வாட், பிரித்வி ஷா, ஆயுஷ் மாத்ரே, முஷீர்கான், சர்ப்ராஸ்கான் போன்ற நட்சத்திர வீரர்கள்களமிறங்குகின்றனர். இதனால் இது ரசிகர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது.

DHINA KANI
CANARA BANK
ACCOUNT: 120028528266
IFSC CODE: CNRB0001041

PRINTED BY KANIRAJA V. PUBLISHED BY KANIRAJA V. ON BEHALF OF NAMADHU DHINA KANI TAMIL DAILY AND PRINTED AT SEAMAN GRAPHICS No. 7/253, KVN PURAM 2 2ND STREET, KILPAUKGARDEN, CHENNAI 600010. AND PUBLISHED AT No.28, THALIKATTIPALAYAM, KAITHAMALAI ROAD, UTTUKULI, TIRUPPUR - 638751. EDITOR: KANI RAJA V.